பக்கங்கள் 15+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 04 சனிக்கிழமை 20.09.2025 | அதிர்வு 51

## மகா கூட்டணி விரைவில் மலரும்

### ஐ.தே.க. விழாவில் மனோ சூளுரை



“ஜனநாயக ரீதியில் மகா கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு முற்படு கின்றோம். அதனை 06▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையும் தருணம் இது

## எனது இலண்டன் விஜயம் உத்தியோகபூர்வமானது; ஐ.தே.க. விழாவில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தருணம் இது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழா அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இன்று நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகளும் கலந்துகொண்டனர். 06▶

# மட்டு. மாவட்ட முன்னாள் எம்.பி. கனகசபை இன்று காலமானார்!



(வ.சக்திவேல்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தன்மன்பிள்ளை கனகசபை தனது 86 ஆவது வயதில் இன்று வெள்ளிக்கிழமை காலமானார்.

மட்டக்களப்பு, களுதாவளையைச் சேர்ந்த இவர், வயது மூப்பு காரணமாகக் காலமானார்.

1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி பிறந்த ஓய்வுநிலை அரச உத்தியோகத்தரான கனகசபை, 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்டு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ராஜபக்ஷக்களால் இனி மீண்டெழுவே முடியாது!

## இப்படி அடித்துக் கூறுகின்றது அநுர அரசு

"ராஜபக்ஷக்களின் அரசியல் கதை இந்த நாட்டில் முடிந்துவிட்டது. அவர்களால் இங்கு மீண்டுமொரு அத்தியாயத்தை ஆரம்பிக்க முடியாது."

– இவ்வாறு அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

மீண்டும் மஹிந்த சூறாவளி என்று வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விளக்கேற்றிய பின்னர் அவ் விளக்கின் வெளிச்சம் ஒரு கட்டத்தில்



பிரகாசமாகத் தென்படும். அதாவது விளக்கு அணையப் போகின்றது என்பதே அதன் அர்த்தம். எனவே, அரசியல் ரீதியில் ராஜபக்ஷக்களின் கதை முடிந்துவிட்டது.

இலங்கையில் இனி அந்தப் பழைய கலாசாரத்துக்கு இடமில்லை. தற்போது சிறப்பாக இருக்கின்ற அரசியல் கலாசாரத்தைவிட சிறந்த ஒன்று வந்தால் மக்கள் ஆதரிப்பார்கள்.

அரசியல்வாதிகளின் சொத்து விவரம் இதுவரையில் வெளிவராமல்தான் இருந்தது. அவற்றைக்கூட வெளியிடுவதற்கு நாமே நடவடிக்கை எடுத்தோம். அரசியலில் ஈடுபடும் அனைவரும் கள்வர்கள் அல்லர்.

எவரேனும் முறையற்ற விதத்தில் சொத்து திரட்டி இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். சட்டம் தற்போது அனைவருக்கும் சமம் என்ற வகையில் அமுலாகி வருகின்றது." – என்றார்.

# தந்தை பொல்லால் தாக்கியதில் மகன் மரணம்!

தந்தை பொல்லால் தாக்கியதில் மகன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கேகாலை, தேவாலேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படுவத்த பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

படுவத்த – ஹலமட பகுதியை சேர்நதத 35 வயதுடைய மகனே உயிரிழந்துள்ளார்.

தந்தை தனது மகன் மற்றும் மனைவியைப் பொல்லால் தாக்கியதில் மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மனைவி கோகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




குடும்பத் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தேவாலேகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# திலீபனின் ஊர்திக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தத் திரண்ட மக்கள்

(கி.வசந்தன்)

தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகின்றோம்' என்று முன்னெடுக்கப்படுகின்ற ஊர்திப் பவனி இன்று வவுனியாவை வந்தடைந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பகுதியில் இருந்து வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துடன் ஊர்திப் பவனி வருகின்றது.

இந்நிலையில், வவுனியா மாநகர சபையின் முன்றலில் உள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் திடலுக்கு முன்னால் வந்த குறித்த ஊர்திக்குக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் மலர் தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற ஊர்தி அங்கிருந்து வவுனியா வடக்கின் ஊடாக முல்லைத்தீவு நோக்கிச் சென்றது.

















# நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் ரணிலுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவனல்லன்!

## ஐ.தே.க. விழாவில் மனோ தெரிவிப்பு

"நான் ஒருபோதும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவனல்லன்" என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சி என்பது ஓர் இல்லம். நாங்கள் அனைவரும் ஒரு குடும்பமாகும்.

நான் ஒருபோதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததில்லை.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் நான் அவருடன் இருந்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சி உடைந்த போதும் நான் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்தேன் என்பது அவருக்குத் தெரியும்." – என்றார்.



# ரணிலும் சஜித்தும் அப்பா, மகன் போல்

## இருவரும் ஒன்றிணையும் சந்தர்ப்பம் வந்துள்ளது என்கின்றார் மனோ

ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் அப்பாவும் மகனும் போன்று என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இன்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அப்பாவும் (ரணில்) மகனும் (சஜித்) ஒன்றிணையும் சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை வெளியில் இருந்து நாம் செய்து வருகின்றோம்." – என்றார்.

# கனகசபையின் மறைவு தமிழருக்குப் பேரிழப்பு!

## இரங்கல் செய்தியில் தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு




“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக 2004, தொடக்கம் 2010, வரை பல நெருக்கடிகள், அச்சுறுத்தல் காலத்தில் கடமையாற்றிய நேர்மையான மனிதர் மறைந்த தன்மன்பிள்ளை கனகசபையின் இழப்பு எமக்கு மிகுந்த கவலையைத் தந்துள்ளது. அவரின் மறைவு தமிழர்களுக்குப் பேரிழப்பாகும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அவர் காலத்தில் நான் நாடாளுமன்றம் செல்லாவிட்டாலும் அவருடைய செயற்பாடுகள் அமைதியான நடத்தை தொடர்பாக நான் அறிந்துள்ளேன்.



கடந்த 2004 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். அதில் கூடிய விருப்பு வாக்குகளை அவர் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக கனகசபை ஐயா தெரிவானார். அவருடன் அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ்வரி ஆகிய நால்வரும், தேசியபி பட்டியல் மூலம் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கமுமாக வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முதல் தடவையாக மட்டக்களப்பில் ஐவர் நாடாளுமன்றம் சென்ற வரலாறு அதுவாகும்.

அந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் விடுதலைப் புலிகளுடைய தலைமையே வேட்பாளர்களைத் தெரிவு செய்தனர். அதில் ஒரு நிர்வாக அதிகாரியாக இருந்த கனகசபை அண்ணரும் தெரிவானார்.

அந்தக் காலத்தில்தான் கருணா விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்த காலமாகும். கருணா, பிள்ளையான் அச்சுறுத்தல் அதிகரித்த காலம் அந்தக் காலம்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்குவைத்து கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

அதனால் மாமனிதர்களான ஜோசப் பரராசசிங்கம், ரவிராஜ், சிவநேசன், முன்னாள் எம்.பி. சந்திரநேரு ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்போது 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சொந்த ஊருக்கோ, மாவட்டங்களுக்கோ செல்லாமல் கொழும்பில் முடக்கப்பட்டிருந்தனர். மட்டக்களப்பில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களும் சொந்த மாவட்டம் செல்லாமல் மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கி இருந்தனர்.

அப்போது 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரவு – செலவுத் திட்டத்துக்கு மஹிந்த அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டாம் என கனகசபை ஐயாவுடைய மருமகன், அரியம் அண்ணரின்சகோதரர், ஜெயானந்தமூர்த்தியின் மருமகன், தங்கேஸ்வரி அக்காவின் செயலாளர் ஆரையம்பதி அன்புமணி ஐயா ஆகிய நால்வரையும் கடத்திய போது கனகசபை ஐயா மிகவும் அச்சத்தால் சோர்ந்து அரசியலே வேண்டாம் என முடிவெடுத்தார்.

அந்தப் பயம் காரணமாக 2010 ஆம் ஆண்டு தேர்தலில் வேட்பாளராக அவர் சம்மதிக்கவில்லை. அதற்குப் பின்னர் அவர் எந்தத் தேர்தல்களிலும் ஈடுபடவில்லை. அன்று அவருக்கு ஏற்பட்ட மனக்கவலை தொடர்ந்தும் பல ஆண்டுகள் நீடித்து இருந்ததை நான் அவருடன் ஒருதடவை கதைக்கும்போது மனம் விட்டுக் கூறினார்.

அரசியலுக்கு வருவதற்கு முன்னம் மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளராகவும் சேவையாற்றி மக்களுடன் நேர்மையாகச் சிறந்த பணிகளை செய்த ஒருவர் இன்று 86 ஆவது அகவையில் இறையடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றுத் தவிக்கும் உற்றார் உறவினர் ஊர்மக்கள் அனைவருடனும் எனது துயரைப் பகிர்ந்து கொள்கின்றேன்.” – என்றார்.

# உயிரிழந்த சட்டத்தரணியின் வீட்டில் இருந்து ஏராளமான துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மீட்பு

உயிரிழந்த சட்டத்தரணியின் வீட்டில் இருந்து ஏராளமான துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகளை இரத்தினபுரி பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரத்தினபுரியைச் சேர்ந்த 73 வயதுடைய சட்டத்தரணி ஒருவர் தனியாக வசித்து வந்த நிலையில் திடீரென மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சட்டத்தரணியின் வீட்டில் துப்பாக்கிகள் இருக்கின்றன என்று இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் கடந்த 17 ஆம் திகதி இரத்தினபுரி தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சட்டத்தரணியின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 12 போர் துப்பாக்கிகள், ஒரு ரிப்பீட்டர் துப்பாக்கி, 6 பிரித்தெடுக்கப்பட்ட துப்பாக்கி பாகங்கள், 11 பீப்பாய்கள், 2 சிறிய துப்பாக்கிகள், புதிய 12 மற்றும் 16 போர் வெடி மருந்துகளின் 440 சுற்றுகள் மற்றும் பல துப்பாக்கிப் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு இருக்கின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிகள் குற்றச் செயல்களுக்காக வழங்கப்பட்டதா அல்லது குழுக்களிடையே விநியோகிக்கப்பட்டதா என்பதை அறிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சில துப்பாக்கிகள் உள்நாட்டில் தயாரித்தவையா அல்லது வேறு தரப்பினரின் ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாட்டை குறைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## யாழ். மாநகர சபைக்கு நீதிமன்றம் உத்தரவு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாட்டைக் குறைக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (19) யாழ்ப்பாண மாநகர சபைக்கு உத்தரவிட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியர் உமா சுகி நடராஜா தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் ரொஹாந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வே இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

மனு விசாரணைக்கு வந்தபோது, பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகளிடம், மேல்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர், யாழ்ப்பாணப் பகுதியில் காற்று மாசுபாட்டைக் குறைக்க சுற்றுச்சூழல் சட்டங்களின் விதிகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்று விசாரித்தார்.

அதன்படி, யாழ்ப்பாணத்தில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்க, கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு நீதியரசர்கள் அமர்வு, யாழ்ப்பாண மாநகர சபைக்கு அறிவுறுத்தியுள்ளது.மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை இதற்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என்றும் தலைமை நீதியரசர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் சுற்றுச்சூழலில் வெளியிடப்படும் குப்பைகள் மற்றும் இரசாயணக் கழிவுகளால் காற்று மாசுபாடு ஏற்படுவதாகக் கூறி, இந்தச் சூழ்நிலையைத் தடுக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி, சம்பந்தப்பட்ட வைத்தியர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனைத்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விழாவில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “சாதாரண மக்களும் ஜனாதிபதியாக முடியும். அப்படிதான் ரணசிங்க பிரேமதாஸ, மைத்திபால சிறிசேன மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதிகளாகத் தெரிவாகினர்.

எமது நாட்டில் நீண்ட காலமாகப் பல கட்சி ஆட்சி முறை உள்ளது. அதனை ஒழிக்க இந்த அரசு முற்படுகின்றது. அதற்கு இடமளிக்க முடியாது.

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தருணம் இது. என்னைக் கைது செய்வதன் ஊடாக எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தப் பார்க்கின்றனர். இதற்கு நாம் அச்சப்படக் கூடாது.

நான் ஜனாதிபதிப் பதவியில் இருந்த காலத்தில் எனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்தமைக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாக என் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால்,நான் இலண்டன் சென்றது உத்தியோகபூர்வ பயணம் ஆகும். இதனை நான் நிரூபித்தும் அவர்கள் என்னைக் கைது செய்தனர்.

அழைப்பிதழைக் காண்பித்தும் அவர்கள் என்னை விளக்கமறியலில் வைத்தனர்.ஆனால், எனக்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் அரசியல்வாதிகளும் மக்களும் ஒன்றிணைந்தனர். எனக்குத் துணையாக இருந்த அனைவருக்கும் நன்றி.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலில் ஆரம்பித்தது நாங்கள் தான்.

ஆனால், போலிக் குற்றச்சாட்டுக்களின் கீழ் மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்ய நாங்கள் விடமாட்டோம். அதற்கு எதிராக நாங்கள் போராடுவோம்.

நாங்கள் பயப்படவில்லை . நாங்கள் பயந்து ஒதுங்குவோம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்ய முயன்றால் நாங்கள் ஒன்றிணைந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம்.

எந்தவொரு சவால்களுக்கும் முகம் கொடுக்க நாங்கள் தயார்.” – என்றார்.




## மகா கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் விரைவில் செய்வோம். இது கள்வர்களின் கூட்டணி அல்ல.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இன்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மனோ எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “எதிரணிகள் ஒன்றிணைவதற்கு முற்படும்போது கள்வர்கள் ஒன்றிணைகின்றனர் என ஆளுந்தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இங்கு களவு, மோசடிகளுக்கு இடமில்லை. எனவே, அனைவரும் கள்வர்கள் எனக் கூறுவதை ஆளுங்கட்சி நிறுத்த வேண்டும்.

கள்வர்களைப் பிடிக்க வேண்டும், அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கை வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இது தொடர்பான நடவடிக்கைகள் சட்டப்பூர்வமாகவே இடம்பெற வேண்டும். கள்வர்கள் யாரென்பதை நீதிமன்றம் தீர்மானிக்கட்டும்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விமல் வழியில் பிமல்

தன்னை இடதுசாரி அமைப்பாக ஜே.வி.பி. காட்டிக்கொண்டாலும் கூட, அது தென்னிலங்கை அரசியலில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பௌத்த - சிங்கள பேரினவாதத்தை முழுமையாக வரித்துக் கொண்டது என்பது மறுக்க - மறைக்க - மறக்க - முடியாத உண்மை.

ஒரு வகையில் அதன் உண்மை முகமே முழுமையாகவே அதுதான்.

காலத்துக்கு காலம் அரசியல் தேவைகளுக்கு ஏற்ப தன்னுடைய பேரினவாத முகத்தை வெளிப்படுத்துவதும் திரையிட்டு மறைத்துக் கொள்வதும் கூட அதன் வழமையான பண்புதான்.

இப்போது அதிகாரத்திற்கு வருவதற்காக தன்னை இனவாதம் கடந்த சமரசத் தரப்பாக அது காட்டிக் கொண்டது. அதன் உள்ளாந்தம் புரியாத அப்பாவி தமிழர்கள் கணிசமானோரும் சேர்ந்து அக்கட்சிக்கு வாக்களித்து அதன் கைகளில் அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள்.

அத்தரப்பின் தந்திரத்தினால் வழமைக்கு மாறாக முன்னைய அரசுகளுக்கு கிடைக்காத மிகப்பெரிய நாடாளுமன்றப் பலமும் நிறைவேற்று அதிகாரப் பலமும் அதன் கைகளுக்கு வந்து விட்டன. அதனால் இப்போது அது அதன் பரவணிப் புத்தியை, பௌத்த - சிங்களப் பேரினவாத உண்மை முகத்தை, வெளிப்படுத்தத் தொடங்கி இருக்கின்றது.

அதிகாரத்தை ஈட்டுவதற்காக ஒரு காலத்தில் ஜே.வி.பியில் இருந்து கொண்டு விமல் வீரவன்ஸ போன்றவர்கள் இதே பேரினவாத முகத்தை வெளிப்படுத்தினர். அவரையும் அவரது அணியினரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியமை மூலம் தாங்கள் பேரினவாதிகள் அல்லர் என்ற ஒரு நாடகத்தை மற்றைய ஜே.வி.பியினர் காட்டினர்.

இப்போது முழு அதிகாரமும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தங்களுக்கானது என்பது உறுதியானதும், இன சமரசம் என்ற முகமூடியை கழற்றி எறிந்து விட்டு, சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கி இருக்கின்றனர்.

அக்கட்சியின் மிக வலிமையான உறுப்பினரும் கட்சியில் நாடாளுமன்றக் குழுத்தலைவராகவும் இருக்கின்ற அமைச்சர் பிமல் ரத்நாயக்க காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்தி ஆகியவை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வைத்து பகிரங்கமாக வெளியிட்ட அறிவிப்புகள் இந்த ஆட்சிப் பீடத்தின் பேரினவாத முகத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்தி இருக்கின்றன.

தமிழர்களுக்கு எதிர்ப்பான நிலைப்பாட்டை எடுப்பதற்கு இந்தியாவையும் வெளிப்படையாக பகைத்துக் கொள்ளத் தயங்க மாட்டோம் என்பதைத்தான் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் பண்ணிய அழிச்சாட்டிய நடவடிக்கை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

தமிழர்களின் மூளை மையமான வடக்கை - குறிப்பாக யாழ்குடாநாட்டை - மேம்படுத்த உதவ மாட்டோம், அந்த விடயத்தில் தேவைப்பட்டால் இந்தியாவின் தலையீட்டையும் தூக்கி எறியப் பின்னிற்க மாட்டோம் என்பதை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தமது எகத்தாளமான பேச்சு மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

மிலேனியத்தின் முதல் தசாப்தத்தில் விமல் வீரவன்ஸ ஜே.வி.பியில் இருந்து கொண்டு செய்த வேலையைத்தான் - தற்போதும் அக்கட்சிக்கு வெளியில் இருந்து கொண்டு செய்கின்ற அடாவடித்தனத்தைத்தான் - இப்போது பிமல் ரத்நாயக்கவும் அரசுக்குள் இருந்து கொண்டு செய்கிறார். அவ்வளவுதான். வேறு, வேறுபாடு இல்லை.



# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு விவசாய செய்கை விழிப்புணர்வு நிகழ்வு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேசசெயலகஉத்தியோகத்தர்களுக்கான மாமரச் செய்கையில் கத்தரித்தலும் பராமரித்தலும் தொடர்பான நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க குறித்த நிகழ்வில் செயன்முறை பயிற்சியுடன் கூடிய விளக்கங்களை தம்பலகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் விவசாய போதனாசிரியர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இணைந்து வழங்கினர்.

இதில் மாமரச் செய்கையின் போது அதனை கத்தரித்து பராமரிப்பது தொடர்பில் செயன் முறையுடன் கூடிய பயிற்சி விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இதில் உதவி பிரதேச செயலாளர், நிருவாக உத்தியோகத்தர் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்





(றிபாஸ்)

மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கலும், பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் ஏ.எல்.ரஜாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மயோன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், மயோன் சமூக சேவை அமைப்பின் தலைவருமான, றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.ஹில்மி, கட்சியின் ஊடக இணைப்பாளர் சாஜீத், ஒருங்கிணைப்பாளர் ஜெமீல், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் மயோன் சமூக சேவைகள் அமைப்பினால் இன,மத வேறுபாடுகளுக்கப்பால் அம்பாரை மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளுக்கும், முன்பள்ளிகளுக்கும், மாணவர்களின் நண்மை கருதி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.





# அரச நிறுவனங்களின் சேவைகளுக்கு வீட்டில் இருந்தவாறு கொடுப்பனவுகள்!

## *இந்தத் திட்டத்தை ஆளுநர் வரவேற்பு*

அரச நிறுவனங்களின் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை வீட்டிலிருந்தவாறு செலுத்தக் கூடிய முறைமை உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது. எண்ணிமைப்படுத்தல் (டிஜிட்டலைஷேஷன்) மூலம் ஊழல் மோசடிகளைக் குறைக்க முடியும். எனவே வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து நிறுவனங்களும் இந்தச் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதை வரவேற்கின்றோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைவாக GovPay என்ற செயலியின் அறிமுகம் மற்றும் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை (19) வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில் தெரிவித்ததாவது,

இந்த அரசின் பிரதான கொள்கைகளில் ஒன்றான எண்ணிமைப்படுத்தலின் ஒரு அங்கமாகவே GovPay அமைந்துள்ளது.

இன்று இலங்கை மின்சார சபையின் மின்பட்டியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை பலரும் வீட்டிலிருந்தே செலுத்துகின்றார்கள். வீண் அலைச்சல், நேர விரயத்தை இல்லாமல் செய்தல் என்பவற்றையே பலரும் விரும்புகின்றார்கள். தற்போதுள்ள சூழலில் கணவன் மற்றும் மனைவி இருவருமே தொழில் செய்பவர்களாக உள்ளனர். அவ்வாறான நிலையில் அரச நிறுவனங்களின் சேவைகளுக்கு உரிய கட்டணங்களை அரச அலுவலகங்களுக்கு நேரில் சென்று குறித்த நேரத்துக்குள் செலுத்துவது என்பது மிகப் பெரிய சவாலாக மாறி வருகின்றது. எனவே, இவ்வாறு வீட்டிலிருந்தே எமது கொடுப்பனவுகளைச் செய்யக் கூடிய சேவைகள் மிக அவசியமானவையே.

இத்தகைய எண்ணிமைப்படுத்தல் ஊடான சேவைகளால் ஊழல் மோசடிகள் குறைவடையும். இந்தச் சேவைகள் வெளிப்படைத்தன்மையானது. தரவுகளை இலகுவாகவும் பெற்றுக் கொள்ள முடியும். இதன் ஊடாக நிர்வாகச் செலவீனங்கள் கூட அரச நிறுவனங்களுக்கு குறைவடையும். அத்துடன் அரச நிறுவனங்கள் தங்கள் சேவைகளை மேம்படுத்தவும் இது உதவும்.

இதுவரை 135 அரச நிறுவனங்கள் இந்தச் செயலியில் இணைந்துள்ளன. அவற்றின் ஊடான 700 இற்கு மேற்பட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதை வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட அரச திணைக்களங்களில் நடைமுறைப் படுத்துவதை விரைவுபடுத்தவேண்டும்.- என்றார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை இந்தச் சேவைக்குள் முதல் கட்டமாக உள்வாங்கும் நடவடிக்கைகள் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டன. உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு இது தொடர்பான தெளிவூட்டல் வழங்கப்பட்டது. அவர்களுடனான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, லங்காபே நிறுவனத்தின் பிரதி தலைமை நிறைவேற்று அதிகாரி டினுக பெரேரா, லங்காபே நிறுவனத்தின் முதன்மை சேவை வழங்கல் அதிகாரி செல்வி துசா முகுந்தன், லங்கபே நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் சிவபிரசாந் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# தோட்ட மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் நடமாடும் சேவை

(மஸ்கெலியா)

தோட்ட மக்களுக்கு பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை நேற்று (19) வெள்ளிக்கிழமை பொகவந்தலாவ பெருந்தோட்ட விளையாட்டுக் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையை நோர்வூட் பிரதேச செயலகம் மற்றும் இலங்கை தேசிய சமாதான அமைதிப் பேரவையின் நுவரெலியா மாவட்ட சர்வமத குழு என்பன ஏற்பாடு செய்திருந்தன.

இங்கு பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகள், திருமணச் சான்றிதழ்கள், இறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



அஸ்வெசும பயனாளிகளது வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நோர்வூட் பிரதேச செயலக அதிகாரிகள், பொகவந்தலாவ பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று இந்த நடமாடும் சேவையை நடத்தினர்.

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பயனாளிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# நோயாளி பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்றிட்ட போட்டியில் மன்னார் வைத்தியசாலை முதலிடம்!

(வாஸ் கூஞ்ஞ)

சுகாதார அமைச்சால் உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு இவ்வாண்டு தேசிய ரீதியில் வைத்தியசாலைகளுக்கிடையில் நோயாளி பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்றிட்டங்களுக்கான போட்டியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி அசாத் எம். ஹனிபாவின் வழிகாட்டலின் பலனாக முதலாம் இடத்தை மன்னார் பொது வைத்தியசாலை தட்டிக்கொண்டது.

சுகாதார அமைச்சால் உலக நோயாளர் பாதுகாப்பு தினம் புதன்கிழமை நினைவு கூறப்பட்டதை முன்னிட்டு தேசிய ரீதியில் வைத்தியசாலைகளுக்கிடையில் நோயாளி பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்றிட்டங்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டன.

இதற்கான போட்டிகளின் முடிவுகளின் படி மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு தங்க விருதை தனதாக்கிக் கொண்டு சாதனைப் படைத்துள்ளது.

அத்துடன் இந்த வைத்தியசாலைக்கு சிறப்பு பாராட்டுச் சான்றிதலும் வழங்கப் பட்டது. இவ்விருதானது சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸவால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி அசாத் எம். ஹனிபாவுக்கு வழங்கப்பட்டது.

'ஒவ்வொரு புதிதாகப் பிறந்த குழந்தைக்கும் ஒவ்வொரு சிறு குழந்தைக்கும் பாதுகாப்பான பராமரிப்பு' எனும் தொனிப் பொருளில் இவ்வருடம் உலக நோயாளர் பாதுகாப்பு தினம் நடைமுறைப்ப டுத்தப்படுகிறது.

மன்னார் மாவட்ட சுகாதாரத்துறையில் பல்வேறு வளப் பற்றாக்குறைகள் இருந்த பொழுதும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம். ஹனிபாவின் அர்ப்பணிப்பான தலைமைத்துவத்தின் கீழ் சிறந்த வழிகாட்டலின் கீழ் கிடைக் கப்பெற்ற விருது எனவும் சுட்டிக்காட் டப்பட்டது.

இவ்போட்டியில் இரண்டாம் இடத்தை வத்துப்பிட்டிவல ஆதார வைத்திய சாலையும் மூன்றாம் இடத்தை உடுகம ஆதார வைத்தியசாலையும் பெற்றுள் ளன.

உலக சுகாதார சபையின் உலக நோயாளி பாதுகாப்பு தினம் ஆண்டு தோறும் செப்ரெம்பர் 17 ஆம் திகதி அன்று அனுஷ்டிக்கப்படுவதும் இதற்கான போட்டிகள் நடைபெறுவதும் குறிப் பிடத்தக்கது.

நோயாளிகள் குடும்பங்கள் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் என்பன உலகலாவில் நோயாளி பாதுகாப்பை மேம்படுத்த ஒன்றிணைக்கப் படும் ஒரு நிகழ்வாகவும் இது அமை கின்றது.

இவ்வாண்டு (2025) வாழ்க்கையில் தொடக்கத்தில் இருந்தே பாதுகாப்பு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் நமது இளைய நோயா ளிகள் புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் குழந்தைகளை பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் கருப்பொருளாக முன்னெடுக்கப்படுகிறது.



# குப்பிளான் ஐ. சண்முகன் நினைவாக உடுவில் மகளிரில் திறன் வகுப்பறை!

குப்பிளான் ஐ. சண்முகன் நினைவாக அவரின் துணைவியார் புனிதவதியின் நிதி அனுசரணையுடன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவிகளுக்கான திறன்வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

ஈழத்தமிழ் இலக்கிய உலகின் காத்திரமான எழுத்தாளரான குப்பிழான் ஐ. சண்முகனின் (ஐயாத்துரை சண்முகலிங்கம்) ஞாபகார்த்தமாக அவரின் துணைவியார் புனிதவதி சண்முகலிங்கத்தின் நிதியனுசரணையில் இந்த வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறன் வகுப்பறையையும் கல்வெட்டையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரான செல்வி. இராஜலட்சுமி சுப்பிரமணிய



குருக்கள் மற்றும் புனிதவதி சண்முகலிங்கம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

முன்னதாக பாடசாலையின் நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு திறன்வகுப்பறைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ராஜேந்திரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினர் உரையை செல்வி இராஜ்யலட்சுமி சுப்பிரமணிய குருக்களும், அனுசரணையாளர் உரையைத் திருமதி கமலவதனா தேவராஜாவும், கொடையாளர் உரையைத் திருமதி புனிதவதி சண்முகலிங்கமும், சிறப்புரையை ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்தினர்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர் சண்முகநாதன் நிகழ்வைத் திறம்பட தொகுத்து வழங்கி இருந்தார். இறுதியாக ஆரம்பப் பிரிவு மாணவிகளின் மயில் நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

புனிதவதி சண்முகலிங்கனின் 50 லட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்ட திறன்வகுப்பறைக் கட்டட நிர்மாணப் பணிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் கமலவதனா தேவராஜா சிறப்பாக ஒருங்கிணைத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலத்தில் நவீன தொழிநுட்பத்துடன் இணைந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திறன் வகுப்பறை இன்றியமையாததாகும்.








# தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள் எமக்கு முக்கியம்

## நாகை பிரசாரத்தில் விஜய் தெரிவிப்பு








தமிழக மீனவர்களுக்கு குரல் கொடுக்கும் வேளையில், நம் தொப்புள் கொடி உறவுகளான இலங்கை தமிழர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அவர்களுக்காகவும் நிற்பது நமது கடமை என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்தார்.

நாகையில் த.வெ.க. தலைவர் விஜய் இன்று பிரச்சாரத்தில் ஈடுபடடார்

த.வெ.க. தலைவர் விஜய் தனி விமானம் மூலம் இன்று காலை திருச்சிக்கு சென்றார். பின்னர், அவர், நாகை பிரச்சாரத்திற்கு கருப்பு காரில் சென்றார். நாகை, திருவாரூர் பிரச்சாரத்தை முடித்து விட்டு இரவு 10 மணிக்கு இந்த விமானம் மூலம் சென்னை திரும்ப உள்ளார்.

பிரச்சாரத்தில் விஜய் உரையாற்று கையில்,

“அண்ணாவுக்கும் பெரியாருக்கும் வணக்கம். நாகூர் ஆண்டவர் அன்புடன், நெல்லுக்கடை மாரியம்மன், வேளாங்கண்ணி ஆசியோடு, கடல்தாய் மடியில் இருக்கும், என் மனதுக்கு நெருக்கமான நாகப்பட்டினம் மண்ணில் இருந்து பேசிக் கொண்டிருக்கிறேன்.

மீன்பிடி தொழில், விவசாயம் என உழைக்கும் மக்கள் இருக்கும் ஊர் நாகப்பட்டினம். மத வேறுபாடு இல்லாத அனைவருக்கும் பிடித்துப்போன, மதச் சார்பின்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் உங்கள் அனைவருக்கும் சிறப்பான வணக்கங்கள்.

தமிழகத்தில் மீன் ஏற்றுமதியில் 2 ஆவது இடத்தில் இருப்பது நாகப்பட்டினம் துறைமுகம். ஆனால், இங்கே மீன் பதப்படுத்தும் நவீன தொழிற்சாலைகள் இல்லை. அதிக குடிசை உள்ள பகுதியும் நாகப்பட்டினமே. இந்த முன்னேற்றத்துக்கு எங்கள் ஆட்சி தான் சாட்சி என்று அடுக்கு மொழியில் பேசிப் பேசி, அதை நாம் கேட்டுக் கேட்டு, நம் காதில் ரத்தம் வந்ததுதான் மிச்சம். இவர்கள் ஆண்டது பத்தாதா? நம் மக்கள் தவிப்பது பத்தாதா?

இலங்கை கடற்படையால் நமது மீனவர்கள் தாக்கப்படுவதையும், அதற்கான காரணத்தையும்,தீர்வையும்மதுரைமாநாட்டில் பேசினேன். அதை விமர்சித்தார்கள். நான் இன்று நேற்றா மீனவர்களுக்காக குரல் கொடுக்கிறேன். இதே நாகையில் 2011–லேயே பெப்ரவரி 22 அன்று இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஒரு பொதுக் கூட்டம் நடத்தினேன். விஜய் களத்துக்கு வருவது ஒன்றும் புதிதல்ல. முன்பு விஜய் மக்கள் இயக்கமாக வந்து நின்றோம். இன்று த.வெ.க. என்ற கட்சியாக வந்து நிற்கிறோம். என்றும் மக்களோடு மக்களாக நான் நிற்பேன்.

மீனவர்களுக்கு குரல் கொடுக்கும் வேளையில் நம் தொப்புள் கொடி உறவுகளான இலங்கை தமிழர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அவர்களுக்காகவும் நிற்பது நமது கடமை. மீனவர்கள் நலன் போல் ஈழத் தமிழர்கள் வாழ்க்கையும் முக்கியம். கடிதம் எழுதிவிட்டு அமைதியாக இருக்க நாம் கபட நாடக திமுக அல்ல. தமிழக மீனவர்கள், இந்திய மீனவர்கள் என்று பிரித்துப் பேச நாம் பாசிச பா.ஜ.கவும் அல்ல,

நாகப்பட்டின மண் வளத்தை பாதிக்கும் இறால் பண்ணைகளை முறைப்படுத்த வேண்டும். அலையாத்திக் காடுகளை பாதுகாக்க வேண்டும். குடும்ப வளர்ச்சி தான் முக்கியமான வேலையாக இருக்கும் கட்சி, மக்கள் தாகம் தீர்க்க காவிரி நீரைக் கொண்டு வந்தார்களா? இங்கே ஒரு அரசு கடல்சார் கல்வி பயிற்றும் கல்லூரி கொண்டு வந்திருக்கலாம். இங்கே கடல் உணவுகள் சம்பந்தமாக எந்த தொழிற்சாலையையும் அமைக்கவில்லை.

பூச்சாண்டி காட்டுவதையெல்லாம் விட்டுவிட்டு நீங்க தில்லா, கெத்தா, நேர்மையா எலக்‌ஷனை சந்திக்க வாங்க. பார்த்துக்கலாம். கொள்கையை பெயருக்கு வைத்துக் கொண்டு குடும்பத்தின் கூட்டணியோடு கொள்ளையடிக்கும் நீங்களா, இல்லை தமிழகத்தின் ஒவ்வொரு வீடுகளில் இருக்கும் நானா? என்று பார்த்துவிடலாம். இனி மேல் தடை போட்டால் நான் மக்களிடமே அனுமதி கேட்டுக் கொள்வேன்.” – என்றார்.



# தொகுதி மேம்பாட்டு நிதியினை மத்திய அரசு உயர்த்த வேண்டும்

## முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

மாநில அரசே எம்எல்ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதியாக 3 கோடி இந்திய ரூபா வழங்கும் நிலையில், எம்.பி.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 10 கோடி இந்திய ரூபாவாக மத்திய அரசு உயர்த்தி வழங்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக ஹதிஷா' குழுவின் ஆய்வுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு (திஷா) குழுவின் 5 ஆவது ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. தலைமைச் செயலர் நா.முருகானந்தம் வரவேற்றார்.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“மத்திய அரசின் தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் 45,312 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 67.97 கோடி இந்திய ரூபா, சமுதாய முதலீட்டு நிதியாக 75,127 சுயஉதவிக் குழுக்களுக்கு 801.62 கோடி இந்திய ரூபா, நலிவு நிலைக்குறைப்பு நிதியாக 13,546 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு 75.73 கோடி இந்திய ரூபா வழங்கப்பட்டுள்ளது.

முதியோர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு 25,001 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 1 லட்சத்து 57,316 பேர் பயனடைந்துள்ளனர். 2025-26 வரவு செலவு திட்டத்தில் மகளிருக்கு 37 ஆயிரம் கோடி இந்திய ரூபா வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடந்த செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை 1 லட்சத்து 46,100 சுயஉதவிக் குழுக்களுக்கு 13,062 கோடி இந்திய ரூபா வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 1,274 கோடி இந்திய ரூபா நிதி வரப்பெற்று, 9,755 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2,290 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. தமிழகத்தில் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதியாண்டுக்கு 3 கோடி இந்திய ரூபா வீதம், 234 தொகுதிகளுக்கும் 702 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டு, அடிப்படை, உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. மாநில அரசே எம்.எல்.ஏக்களுக்கு 3 கோடி இந்திய ரூபா வழங்குவதால், எம்.பி.க்கள் நிதியை 10 கோடி இந்திய ரூபாவாக உயர்த்த வேண்டும். இதை வலியுறுத்தி இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.” என்றார்.

# நான் தமிழ்நாடு செல்வதை தடுக்க இயலாது: அழகிரி பேச்சுக்கு கங்கனா எம்.பி. பதிலடி

காங்கிரஸ் நடத்தும் போராட்டங்களுக்கு 100 கோடி ரூபா கொடுத்து பெண்கள் அழைத்து வரப்படுகின்றனர் என்று பா.ஜ.க. எம்.பி.யும் நடிகையுமான கங்கனா ரனாவத் கூறி வருகிறார்.

மேலும், டில்லி விமானநிலையத்தில் பெண் சி.ஆர்.பி.எப். வீராங்கனை ஒருவர் கங்கனாவை அறைந்தார்.

நடிகை கங்கனா ரனாவத் தமிழகத்துக்கு வந்தால், அவர் மீது சுமத்தப்பட்ட அவதூறு வழக்குகளை நினைவு கூர்ந்து அவர் அறையப்பட வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரி அண்மையில் கூறியிருந்தார்.

பா.ஜ.க. எம்.பி.யை அவ்வாறு இவர் விமர்சித்திருப்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து நடிகை கங்கனா ரனா




வத் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“நான் தமிழ்நாடு வரும்போது என்னை அறைய வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியிருக்கிறார். இதற்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன். நான் தமிழ்நாடு செல்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இது நமது இந்தியா. நாம் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். வரலாம். இதை யாராலும் தடுக்க முடியாது.

தமிழில் நான் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வேடத்தில் ஒரு படத்தில் நடித்தேன். இந்தப் படம் தலைவி என்ற பெயரில் வெளியானது. இந்த விஷயத்தை நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்களிப்பின்போது, நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது என்னை சில எம்.பி.க்கள் கடந்து சென்றனர். கடந்து சென்ற 4 எம்.பி.க்களில் 3 பேர் என்னை தலைவி என்று அழைத்தனர். அந்த அளவுக்கு அவர்கள் என் மீது பாசம் காட்டுகின்றனர்.

ஒரு தனிநபரின் தனிப்பட்ட கருத்துக்கள் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. பெண்களுக்கு எதிரான இதுபோன்ற அவமரியாதையான கருத்துக்களை பொது இடத்தில் பயன்படுத்தக்கூடாது. அது மக்களுக்கு தவறான செய்தியை அனுப்பிவிடும்” என்றார்.

# சூடானில் பள்ளிவாசல் மீது தாக்குதல் 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு





சூடானின் டார்ஃபர் பகுதியில் உள்ள பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு, துணை இராணுவ ஆதரவுப் படைகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது,

எனினும் அந்தக் குழு, தாக்குதலுக் குப் பொறுப்பேற்கவில்லை.

துணை இராணுவம் மற்றும் சூடான் இராணுவம் என்பன இரண்டு ஆண்டு களுக்கும் மேலாகக் கடுமையான உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், டார்ஃபூரில் உள்ள கடைசி இராணுவ கோட்டையாக உள்ள, ஃபாஷரின் முழுமையான கட்டுப்பாட்டைக் கைப்பற்றத் துணை இராணுவத்தினர் போராடி வருகின்றனர்.

## வான்வெளி மீறல்:
# நேட்டோவை ஆலோசனைக்கு அழைக்கின்றது எஸ்டோனியா

ரஷ்ய போர் வானூர்திகள் தங்கள் வான்வெளியை மீறியதை அடுத்து, எஸ்டோனியா, ஏனைய நேட்டோ உறுப்பு நாடுகளுடன் ஆலோசனை நடத்தக் கோரிக்கை விடுத்துள்ளது.

எஸ்டோனியாவின் வெளியுறவு அமைச்சகம் இந்த ஊடுருவலை வெட்கக்கேடானது என்று கண்டித்துள்ளது.

மூன்று ரஷ்ய மிக்-31 ரக போர் வானூர்திகள், எஸ்டோனிய வான் பரப்பில் அனுமதியின்றி நுழைந்து மொத்தம் 12 நிமிடங்கள் அங்கேயே பறப்பை மேற்கொண்டதாக, அந்த நாட்டின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், தமது இராணுவக் கூட்டணி உடனடியாக பதிலளித்து ரஷ்ய வானூர்தியை இடைமறித்தது என்று நேட்டோ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



# பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் மனைவி பிரிஜிட்டின் பாலினம் தொடர்பில் சர்ச்சை



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் மனைவி பிரிஜிட்டின் பாலினம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் 2007 இல் தன்னை விட 25 வயது மூத்த பிரிஜிட்டை (வயது 72) என்பவரை திருமணம் செய்துகொண்டார்.

இமானுவேல் மக்ரோன் ஒரு மாணவராக இருந்தபோது அவரது மனைவி பிரிஜிட் மக்ரோன் பாடசாலை ஆசிரியையாக இருந்தார். இதற்கிடையே மக்ரோன் ஒரு வினோதமான பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார்.

அவர் தனது மனைவி ஒரு ஆண் அல்ல பெண் தான் என அமெரிக்க நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மக்ரோன் உடைய மனைவியும் பிரான்சின் முதல் பெண்மணியுமான பிரிஜிட் மக்ரோன் ஒரு காலத்தில் ஆணாக இருந்ததாகவும், பாலின மாற்றத்திற்கு உட்பட்டு பெண்ணாக மாறியதாகவும் வெளியான கருத்துக்கள் 2017ஆம் ஆண்டு முதல் சர்ச்சையை ஏற்படுத்தியது.

நடாஷா ரே என்பவர் வெளியிட்ட யூடியூப் காணொளியில் பிரிஜிட் மக்ரோனின் உண்மையான பெயர் ஜீன்-மைக்கேல் ட்ரோக்னக்ஸ் என்று கூறினார்.

மேலும் பிரிஜிட் உடைய சகோதரனின் புகைப்படம் என்று நம்பப்படும் ஒன்றை பகிர்ந்து அதனுடன் ஒப்பிட்டு இருவரும் வெவ்வேறு ஆட்கள் இல்லை, இருவரும் ஒரே நபர் தான் எனவும் காணொளியில் நடாஷா கூறியிருந்தார்.

இதுதொடர்பான பிரான்ஸ் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, நாடாஷாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டு பின்னர் அந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டது.

இதற்கிடையே, அமெரிக்க தீவிர வலதுசாரி அரசியல் விமர்சகர் கேண்டஸ் ஓவன்ஸ் பிரிஜிட் மக்ரோன் ஒரு ஆண் என்று பேசி வந்தார்.

அவருக்கு எதிராக மக்ரோன் தம்பதியினர் அமெரிக்க நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்கின் ஒரு பகுதியாக, பிரிஜிட் மக்ரோன் கர்ப்பம் தரித்திருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் பிற அறிவியல் ஆதாரங்களை அமெரிக்க நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக மக்ரோனின் வழக்கறிஞர் டாம் கிளேர் தற்போது தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் - 02

கனடா முரசு

சனிக்கிழமை 20/09/2025

## அயர்லாந்து 'க்னீகேப்' இசைக்குழு கனடாவிற்குள் பிரவேசிக்கத் தடை



C2 ▶






# மெக்சிக்கோவுடன் வர்த்தகம், பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் கனடா



அமெரிக்காவுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், மெக்சிகோவுடன் கைகோர்க்க கனடா முடிவு செய்துள்ளது.

கனடா பிரதமரான மார்க் கார்னி, மெக்சிகோ சென்று அந்நாட்டின் ஜனாதிபதியான கிளாடியாவை சந்தித்துள்ளார் .

இதன்போது இருநாட்டு ஜனாதிபதிகளும் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன.

C2 ▶

# கனடாவின் கிழக்கு பிராந்தியத்தில் உறைபனி தொடர்பில் எச்சரிக்கை






கனடாவின் கிழக்கு பிராந்தியத்தில் உறைபனி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடா சுற்றுச்சூழல் துறை இந்த எச்சரிக்யை வெளியிட்டுள்ளது. குறிப்பாக கியூபெக் மற்றும் நியூபிரன்ஸ்விக் மாகாணங்களுக்கு இந்த எச்சரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு மாகாணங்களும் குளிரான வானிலை காரணமாக பனியால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள நிலையில், அதிகமான உறைபனி எச்சரிக்கைகள் கியூபெக்கில் அறிவிக்கப்பட்டுள்ளன.

மொன்ரியாலுக்கு வெளியேயுள்ள வால்–டே–மொன்ட்ஸ்,

C2 ▶




# அயர்லாந்து 'க்னீகேப்' இசைக்குழு கனடாவிற்குள் பிரவேசிக்கத் தடை

உலகின் பிரபல இசைக்குழுவொன்றுக்கு கனடாவிற்குள் பிரவேசிக்க அதிரடி தடை விதிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்து ராப் இசைக்குழுவான 'க்னீகேப்' விற்கு கனடாவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை டொரண்டோ நாடாளுமன்ற உறுப்பினர் வின்ஸ் காஸ்பாரோ சமூக ஊடகமான எக்ஸில் பதிவிட்டுள்ளார்.

"கனடாவிற்குள் நுழைய க்னீகேப் குழுவிற்கு தகுதி இல்லை என்று தீர்மானித்துள்ளோம். அரசியல் வன்முறையை ஆதரிப்பது, பயங்கரவாதத்தை ஊக்குவிப்பது, யூத விரோத கருத்துகள் மற்றும் வெறுப்புரைகளை எங்கள் அரசு சகிக்காது," என்று அவர் பதிவிட்டுள்ளார்.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இந்த குழு ஒக்டோபரில் டொரண்டோவில் இரண்டு கச்சேரிகளிலும், வான்கூவரில் இரண்டு கச்சேரிகளிலும் பங்கேற்க திட்டமிட்டிருந்தது.

"இந்த குழு அரசியல் வன்முறையை வலுப்படுத்தி, ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளது," என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கனடாவின் இந்த நடவடிக்கை, இந்த கோடையில் ஹங்கேரி எடுத்த அதே மாதிரியான முடிவைத் தொடர்ந்து வந்துள்ளது.

ஹங்கேரி அதிகாரிகள், இந்த இசைக் குழுவின் வருகை தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்.டி.பி. கட்சி தலைமைப் பதவிக்கு போட்டியிடுகிறார் பிரபல இயக்குநர்

திரைப்பட இயக்குநரும் பத்திரிகையாளருமான அவி லூயிஸ், கனடா நியூ டெமோக்ராட்டிக் கட்சியின் (என்.டி.பி.) தலைமைப் பதவிக்காக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.



சமூக ஊடகங்களில் வெளியிட்ட காணொலி மூலம் அதிகாரப்பூர்வமாக அவர் இதனை அறிவித்துள்ளார்.

அதே நேரத்தில், ஆல்பர்டாவின் என்.டி.பி. எம்.பியான ஹெதர் மெக்பர்சன், தேர்தல் கனடா இணையதளத்தில் தலைமைத்துவ வேட்பாளராக பதிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆனால், அவர் இதுவரை அதிகாரப்பூர்வமாக போட்டியிடுவதாக அறிவிக்கவில்லை. பேட்டிக்கான கோரிக்கையையும் அவரது பேச்சாளர் நிராகரித்துள்ளார்.

அவி லூயிஸ் தனது காணொலியில், வாழ்வாதாரச் செலவு அதிகரித்திருப்பதைப் பற்றி சுட்டிக்காட்டியுள்ளார்.

தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றம், தொலைத்தொடர்பு மற்றும் உணவக சந்தைகளில் சில பெரிய நிறுவனங்கள் அதிக கட்டுப்பாடு செலுத்துவதாலேயே ஏற்பட்டது என அவர் குற்றம்சாட்டினார்.

மேலும், தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த லிபரல் மற்றும் கன்சர்வேட்டிவ் அரசுகள் கார்பன் வாயு உமிழ்வுகளை கட்டுப்படுத்த தவறியதால் காட்டுத் தீ பரவல் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

**மெக்சிக்கோவுடன்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த நிலையில், இரு நாடுகளும் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நெருங்கிய ஒத்துழைப்பு அளிப்பது என முடிவு செய்துள்ளன.

பேச்சுவார்த்தைகளுக்குப் பின் ஊடகவியலாளர்களை சந்தித்த கனடா பிரதமரான மார்க் கார்னியும் மெக்சிகோ ஜனாதிபதியான கிளாடியாவும், தங்கள் இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு குறித்து பேசிய அதே நேரத்தில், அமெரிக்காவுடனான பகிரப்பட்ட கூட்டாண்மைக்கான தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவும் தவறவில்லை.

"நாங்கள் அமெரிக்காவைப் பாராட்டுகிறோம், அவர்களை வலிமையாக்குகிறோம், மேலும் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கும்போது வலிமையானவர்களாக இருக்கிறோம்." என்று மார்க் கார்னி செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

**கனடாவின் கிழக்கு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சைன்ட்-அன்ன்-டு-லாக், சைன்ட்-அடேல், வடக்கிலுள்ள வால்-டோர் மற்றும் தெற்கிலுள்ள கிரான்பி, ஷெர்ப்ரூக், சைன்ட்-ஜஸ்டின் போன்ற பகுதிகளுக்கும் உறைபனி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நியூபிரன்ஸ்விக்கில், ஃபிரெடெரிக்டனுக்கு மேலுள்ள பகுதிகள் – கேம்பெல்டன், ரெட்டிகூஷ் கவுண்டியின் கிழக்கு, எட்மன்ஸ்டன் மற்றும் மதவாஸ்கா கவுண்டி, மவுண்ட் கார்ல்டன்-ரெனஸ் நெடுஞ்சாலை, வுட்ஸ்டாக் மற்றும் கார்ல்டன் கவுண்டி ஆகிய பகுதிகளும் உறைபனியால் பாதிக்கப்படலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கியூபெக்கில் சில பகுதிகளில் இன்றிரவு மற்றும் சனிக்கிழமை இரவு வெப்பநிலை உறைபனி நிலை அல்லது அதற்கும் கீழே குறையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நியூபிரன்ஸ்விக்கில் வெப்பநிலை மறை1 பாகை செல்சியஸ் முதல் 4 பாகை செல்சியஸ் வரை குறையக்கூடும், குறிப்பாக தாழ்வான பகுதிகளில் உறைபனி உருவாகும் அபாயம் அதிகம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.